கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04ம் நாள், புதன்கிழமை
இடைநிலை மனு எண்.01/2022
இன்
அசல் வழக்கு எண்.22/2022
* * * *

மாயவேல் ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

செல்லத்துரை ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 30.08.2024ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.இளையராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிற்கும் வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை 26 விதி 9 பிரிவு 151ன் கீழ் வழக்கு

தாவாச்சொத்தினை நீதிமன்ற ஆணையர் மூலம் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்ய வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்.**

1.1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவில் தாவாச்சொத்தினை 21.10.2019ம் தேதி சமுத்திரபாண்டியன் என்பவரிடமிருந்து ஆவண எண்.8379/2019ன் படி கிரையம் பெற்றதாகவும், அதுமுதல் தாவாச்சொத்தினை மனுதாரர் தனது அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வந்ததாகவும், இந்நிலையில் தாவாச்சொத்திற்கு அருகில் உள்ள உள்ள சொத்தான புஞ்சை சர்வே எண்.77/2ல் ஏக்கர் 3 செண்ட் 3ல் தென்புறத்தில் நடுமையம் தற்போது சப்டிவிஷன் படி பட்டா எண்.1045 சர்வே எண்.77/ஏ5பி நிர் புஞ்சை செண்ட் 55ம், சர்வே எண்.77/2ஏ6ஏ நிர் செண்ட் 10ம் ஆக கூடியது செண்ட் 65ஐ நாச்சிமுத்துப்பிள்ளை அவர்களின் மகள்களிடமிருந்து கடந்த 24.03.2000ம் தேதியில் குருமூர்த்தி என்பவருக்கு ஜெனரல் பவர் ஏஜெண்ட் மூலம் எழுதிக்கொடுத்ததை 28.02.2001ம் கிரையம் மேற்படி வாதி மேற்படி குருமூர்த்தி அவர்களிடம் இருந்து எதிர்மனுதாரர் கிரையம் பெற்றார் என்றும்,

1.2) மேற்படி எதிர்மனுதாரர் மனுதாரரின் தாவாச்சொத்திற்குள் அடிக்கடி அத்துமீறி உள்ளே நுழைய முற்படுவதும் அதனை மனுதாரர் தடுப்பதுமாக இருந்துள்ளார் என்றும், கடந்த 2020ம் ஆண்டு தாவா சொத்திற்கு பட்டா மாறுதல் செய்யும் பொருட்டு தான் பதிவுத்துறை ஆவணங்களையும், வருவாய்துறை ஆவணங்களையும் பார்வையிட்டபோது பிரதிவாதியின் சொத்திற்குரிய மூல ஆவணமாக 25.01.1975ம் தேதியிட்ட ஆவணத்தில் கிழமேலடி வடபுறம் 78, தென்புறம் 82 என்றும், தென்வடலடி மேல்புறம் 356, கீழ்புறம் 352 என்றும் அளவுள்ள 65 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்,

1.3) ஆனால் பிரதிவாதியின் கடைசி கிரைய ஆவணமான 28.02.2001(ஆவண எண்,1279/2001) பத்திரத்தின் அடி அளவுகளில் கிழமேலடி வடபுறம் 63 தென்புறம் 84 1/2 தென்வடலடி கீழ்புரம் 389, மேல்புறம் 380 1/2க்கு 28375 சதுரடி உள்ள 65 செண்ட் என பொய்யாக பதிவு செய்து மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி போலியான ஆவணங்களின் அடிப்படையில் கடந்த 2021ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எதிர்மனுதாரர் மனுதாரரின் தாவாச்சொத்தில் அத்துமீறி நுழைய முற்பட்டார் என்றும், அதனை அவர் தடுத்துவிட்டார் என்றும், எனவே, தாவாச்சொத்தை நீதிமன்ற ஆணையர் ஒருவர் நியமனம் செய்வதன் மூலம் நிலஅளவையர் துணையுடன் தாவாச்சொத்தை அளந்து அதன் அளவுகள் மற்றும் இயற்கை அமைப்புகள், ஆக்கிரமிப்புகள் குறித்து விரிவான

அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.1) எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது தரப்பு எதிருரையில் மேற்படி ஆணையர் நியமன மனு குறித்து மேற்படி எதிருரையில் ஆட்சேபனை செய்து குறிப்பிட்டு எதுவும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேலும் மனுதாரர்/வாதியின் அனுபவத்தையும் உரிமைமூலத்தையும் மறுத்து குறிப்பிட்டுள்ளனர்.

## 3. தீர்வு

இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறார் என்று கூறப்பட்ட நிலையில் மேற்படி இடத்தை அளவையர் அளவீடு செய்து வழக்கு சொத்தின் தன்மை மற்றும் புல எண்கள் குறித்து விவரங்கள் அறிய ஆணையர் நியமனம் செய்வதால் வழக்கு விசாரணைக்கு அது உரிய நடவடிக்கையாக இருக்கும். எனவே, இம்மனுவினை அனுமதிப்பதினால் இருதரப்பில் எவ்வித பாதகமும் ஏற்படபோவதில்லை

என்பதை கருத்தில்கொண்டு, மனுதாரர்கள் தரப்பு வாதத்தின் அடிப்படையிலும், நீதியின் நலன் கருதி இந்நீதிமன்றம் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி வழக்கு சொத்தினை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையராக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுகிறார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் கட்டணமாக ரூ.7,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையருக்கான கட்டணத்தை இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் நீதிமன்ற ஆணையர் வசம் நேரடியாக வழங்க வேண்டும் என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையர் வழக்குச்சொத்தினை சம்பந்தப்பட்ட சர்வேயரின் மூலம் கிராம நிர்வாக அதிகாரியின் துணைக்கொண்டு சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருதரப்பில் வழங்கும் ஆவணங்களின் அடிப்படையிலும் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்தினை தாக்கல் செய்ய திரும்ப அழைக்க நாள்: 04.10.2024.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) திரு.E.மணிகண்டன்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை
2. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

(ஒம்) திரு.E.மணிகண்டன்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.01/2022
அசல் வழக்கு எண்.22/2022
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:04.09.2024